மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16.07.2025), சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு140க்குட்பட்ட சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் நவீன கலையரங்கம் கட்டுமானப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், கோடம்பாக்கம் மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ரீதரன், மண்டல அலுவலர் பி. முருகேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இன்று தியாகிகள் தினம்

தமிழ்நாடு அரசின் சார்பில் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவிப்பு!

அமைச்சர் பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்!

சென்னை, ஜூலை 17 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில், ஜூலை திங்கள் 17ஆம் நாள் தியாகிகள் தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

அமைச்சர் பெருமக்கள், தியாகிகளின் தினத்தை முன்னிட்டு, இன்று (17.7.2025) காலை 9.30 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார், தியாகி செண்பகராமன் ஆகியோர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவுள்ளார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்ற தியாகிகளின் தியாக வரலாற்றை நினைவு கூறும் வகையில், சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் 2.10.1998 அன்று தியாகிகள் மணி மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தியாகிகளைப் போற்றும் வகையில் (17.7.1999) அன்று தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் ஆகியோரின் மார்பளவுச் சிலைகளையும், 17.7.2008 அன்று தியாகி செண்பகராமன் அவர்களின் திருவுருவச் சிலையினையும் சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திறந்து வைத்தார்கள்.

தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி அருகேயுள்ள சேரன்குளத்தில், 1907 ஆம் ஆண்டு பிறந்து, மன்னார்குடியில் பள்ளிப்படிப்பையும் திருச்சி நேஷனல் கல்லூரியில் பட்டப்படிப்பையும் முடித்தார். இவர் இளம் வயதிலேயே இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டார். நீடாமங்கலத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தி அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு, இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தவும் தன்னை தயார்படுத்திக் கொண்டார். நீடாமங்கலத்தில் நடைபெற்ற "சைமனே திரும்பிப் போ" என்ற போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

சென்னை தலைமைச் செயலகம் இருக்கும் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள கொடிக்கம்பத்தில் நள்ளிரவு நேரத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த இராணுவ வீரர்கள் எவருக்கும் தெரியாமல் ஏறி பிரிட்டிஷ் கொடியான யூனியன் ஜாக்கை இறக்கி விட்டு, இந்திய தேசியக் கொடியை ஏற்றிய மாவீரர் தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் ஆவார்.

தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் விருதுநகரில் உள்ள மண்மலைமேடு கிராமத்தில் பெரிய கருப்பசாமி - வள்ளியம்மை தம்பதியினருக்கு 1895 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். 1914 ஆம் ஆண்டு பெண்கள் சமுதாய வளர்ச்சிக்கான சங்கத்தின் செயலாளராகவும், கதர் வளர்ச்சிக்கான பணியையும் மேற்கொண்டார். 1917 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக 6 மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

79 நாட்கள் உண்ணாவிரதம்!

1920 ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்களைச் சந்தித்து அவரை தனது குருவாக ஏற்றுக் கொண்டார். சுதந்திரத்திற்குப் பின் மொழிவழி மாநிலங்கள் அமைந்த போது சென்னை மாகாணம் என்ற பெயரை மாற்றி 'தமிழ்நாடு' எனப் பெயரிட வேண்டுமெனக் கோரி தியாகி சங்கரலிங்கனார் 79 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து, தமது 58ஆவது வயதில் உயிர் துறந்தார்.

தியாகி செண்பகராமன் அவர்கள் திருவனந்தபுரத்தில் 15.9.1891 அன்று பிறந்தார். பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது ஆங்கில அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்தார். தாய்நாட்டை வணங்கி 'ஜெய்ஹிந்த்' எனும் முழக்கத்தை முதன் முதலில் எழுப்பியவர் தியாகி செண்பகராமன் அவர்கள். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் உருவாக்கிய இந்திய தேசிய ராணுவத்திற்கு முன்னோடியாக இருந்த இந்திய தேசியத் தொண்டர் படையை உருவாக்கியவரும் தியாகி செண்பகராமன்தான். அவர் 26.5.1934 அன்று இயற்கை எய்தினார்.

இந்திய நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டு இன்னுயிர் நீத்த விடுதலைப் போராட்டத் தியாகிகள் சங்கரலிங்கனார், ஆர்யா (எ) பாஷ்யம், செண்பகராமன் ஆகியோரின் மாபெரும் தியாகங்களைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் இன்று (17.7.2025) காலை 9.30 மணியளவில் கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் நடைபெறும் தியாகிகள் தின நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், சீர்மிகு பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர் தூவி சிறப்பிக்கிறார்கள்.

சென்னை, கந்தக்கோட்டம்,

முத்துகுமாரசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, ஜூலை 17- இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (16.07.2025) சென்னை, பூங்காநகர், கந்தக்கோட்டம், முத்துகுமாரசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்தார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஆகம விதிகளின்படி குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்றபின், திருப்பணிகள் மேற்கொள்ளப்படாத திருக்கோயில்களை கண்டறிந்து குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சென்னை, பூங்காநகர், முத்துகுமாரசுவாமி திருக்கோயில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு கடந்த 15.07.2013 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர் நிதி ரூ.91.50 இலட்சம் மதிப்பில் திருக்கோயில் இராஜகோபுரம், அனைத்து சன்னதிகள், மண்டபங்கள் புனரமைக்கப்பட்டன. இதனை தொடர்ந்து, கடந்த 10ஆம் தேதி விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்கிய யாக சாலை பூஜைகள் நேற்று (16.07.2025) நடைபெற்ற ஆறாம் கட்ட யாகசாலை பூஜையில் மகா பூர்ணாஹுதிக்கு பின், கடங்கள் புறப்பட்டு, இராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானங்களுக்கும் புனித நீர் ஊற்றி குடமுழுக்கு வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இன்று வரை 3,386 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளன. அதில் 131 திருக்கோயில்கள் முருகன் திருக்கோயில்களாகும்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, சென்னை இணை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் கிழக்கு தாம்பரம் 46 வார்டு திருவள்ளுவர் தெருவில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கோ.பிரதீப்குமார் தலைமையில், பகுதி செயலாளர் எஸ்.இந்திரன் அவர்கள் வரவேற்புரையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் 4–ஆண்டு கழக அரசின் சாதனைகள் விளக்க மாபெரும் தெருமுனை பொதுக்கூட்டத்தில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமை கழக பேச்சாளர் ஒப்பிலாமணி, தலைமை கழக இளம் பேச்சாளர்கள் பம்மல் வீ.தினேஷ், புதுச்சேரி வெற்றிசெல்வன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி,தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் தாம்பரம் சட்டமன்ற நான்காவது மண்டலகுழு தலைவர் பகுதி செயலாளர் டி.காமராஜ் தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், தலைமை கழக பேச்சாளர்கள், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன் உள்ளிட்ட மாவட்ட, மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட,மாநகர பிதிநிதிகள் வட்ட செயலாளர்கள்,வட்ட நிர்வாகிகள்,மகளிர் அணி நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

சேலம் மத்திய மாவட்டம் காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியத்தில். முதலமைச்சரின் ஓரணியில் தமிழ்நாடு தீவிர கழக உறுப்பினர். சேர்க்கை குறித்து மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு செய்து தீவிரமாக பணியாற்றி உறுப்பினர்களை சேர்க்க ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட கழக பொருளாளர் மு.கார்த்திகேயன், ஓமலூர் தொகுதி பொறுப்பாளர் ஈ.ஜி.சுகவனம், ஒன்றிய செயலாளர் கே.சி.அறிவழகன் பேரூர் கழக செயலாளர் கே.ஆர்.பிரபாகரன் மற்றும் நிர்வாகிகள் இருந்தனர்.

வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் பங்கேற்பு!

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி இலட்சுமிபுரம் ஆற்றுப்படுகை மறுசீரமைக்கும் பணி!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் ஜூலை 17- திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் நீர்வளத் துறை சார்பில் இலட்சுமிபுரம் அணைக்கட்டு முதல் ஆண்டார்மடம் தடுப்பணை வரை ஆரணியாற்றின் கரைகளை பலப்படுத்துதல் மற்றும் ஆற்றுப்படுகையை மறுசீரமைக்கும் பணியினை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பணியினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் நீர்வளத் துறை சார்பில் இலட்சுமிபுரம் ஆற்றுப்படுகையை அணைக்கட்டு முதல் ஆண்டார்மடம் தடுப்பணை வரை ஆரணியாற்றின் பலப்படுத்துதல் கரைகளை மறுசீரமைக்கும் பணி. மற்றும் மதிப்பீட்டுத்தொகை ரூ.8.50 கோடி ஆரணியாறு ஆத்திரப்பிரதேச மாநிலம், சித்தூர் மாவட்டத்தின் நகரி மலையில் உற்பத்தியாகி சுருட்டப்பள்ளி வழியாக தமிழ்நாட்டின் எல்லையில் திருவள்ளூர் மாவட்டத்தில் ஊத்துக்கோட்டையில் நுழைந்து பழவேற்காடு ஏரி வழியாக வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இதன் மொத்த நீளம் 131.6 கி.மீ. இதில் 65.40கிமீ. நீளம் ஆந்திரப் பிரதேச மாநிலத்திலும் 66.20 கி.மீ நீளம் தமிழ்நாடு மாநிலத்திலும் அமைந்துள்ளது. கடந்த 2015, 2021-ம் ஆண்டு ஏற்பட்ட புயல், 2023-ம் ஆண்டு மிக்ஜாம் புயல் மற்றும் 2024ம் ஆண்டு ஃபெஞ்சல் புயலின் போது பெய்த கனமழையினால், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள ஆரணியாற்றில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்த வெள்ளப்பெருக்கினால், ஆரணியாற்றின் வெள்ளக் கரைகளில் அரிப்புகள் மற்றும் சேதங்கள் ஏற்பட்டு அருகிலுள்ள கிராமங்களில் வெள்ளநீர் சூழ்ந்து மக்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது.

நீர்வளத்துறையின் மானியக்கோரிக்கையின் பொழுது நீர்வளத்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் சென்னை மற்றும் அதன் புற மாவட்டங்களான திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் தீவிர வெள்ளத்தணிப்புக்கான ஒருங்கிணைந்த 12 வெள்ள மேலாண்மை பணிகள் அறிவிக்கப்பட்டது. இந்த பணிகளுக்கு அரசாணை (டி) எண். 60 நீர்வள (சியா.2) த்துறை நாள் 20.06.2025யில் நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதில் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் இலட்சுமிபுரம் அணைக்கட்டு முதல் ஆண்டார்மடம் தடுப்பணை வரை ஆரணியாற்றின் கரைகளை பலப்படுத்துதல் மற்றும் ஆற்றுப்படுகையை மறுசீரமைக்கும் பணி-க்கு ரூ.8.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள பணியில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் செல்லும் ஆரணியாற்றின் இடதுபுற வெள்ளக்கரைகள் சுமார் 9100மீ நீளத்திற்கும் வலதுபுற வெள்ளக்கரைகள் 1900 மீ - நீளத்திற்கும் பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆரணியாற்றிலுள்ள அ.ரெட்டிபாளையம் தடுப்பணைக்கு கீழ்ப்புறத்தில் 50மீ நீளத்திற்கு வெள்ளத்தடுப்புசுவர் (RCC Flood Protection Wall) கட்டுவதற்கும் மற்றும் 400 மீ நீளத்திற்கு ஆற்றுப்படுகையை மறுசீரமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த வெள்ளத்தணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதால் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் ஆரணியாற்றின் கரையோரமாக உள்ள பெரியகாவனம், சின்னக்காவனம் லிங்கப்பையன்பேட்டை கம்மவர்பாளையம், பெரும்பேடு, சோமஞ்சேரி அ.ரெட்டிபாளையம், தத்தமஞ்சி, எர்ணாகுரஞ்சேரி. வஞ்சிவாக்கம், கடப்பாக்கம் சிறுபழவேற்காடு, பிரளயம்பாக்கம் மற்றும் ஆண்டார்மடம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் 11087 நபர்கள் மற்றும் 22147 ஹெக்டேர் விவசாய நிலங்கள் வரும் காலங்களில் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் தடுக்கப்படும் என அமைச்சர் சா.மு.நாசர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் பொன்னேரி நகர்மன்றத் தலைவர் பரிமாள விஸ்வநாதன், ஆரணியாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் க.கார்த்தியேன், உதவி செயற்பொறியாளர் ஜி.டி.விஜயராகவன், உதவி பொறியாளர் செந்தில் குமார் . பொன்னேரி சார் ஆட்சியர் கு.ரவிகுமார் நிர்வாகிகள் எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ, சி.எச்.சேகர், பா.செ.குணசேகரன், ஜி.ரவிக்குமார், கி.வே.ஆனந்த்குமார், மு.முரளிதரன், அபிராமி குமரவேல், ஜெ.மோகன் பாபு, முகமதுஅலவி, மா.தீபன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சென்னை தென் மேற்கு மாவட்டம் சார்பில் – 60 இடங்களில்

'ஓரணியில் தமிழ்நாடு' வாகன பிரச்சாரம் நடைபெற்றது!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கழகத்தினருக்கு பாராட்டு!

சென்னை, ஜூலை 17- சென்னை தென் மேற்கு மாவட்ட கழகம் சார்பில் தியாகராயர் நகர், மற்றும் மயிலாப்பூர் தொகுதியில் ஒவ்வொரு வட்டத்திலும் தலா 2 அல்லது 3 இடங்களில் 01 ஜூலை தொடங்கி 14 ஜூலை வரை 14 நாட்கள் 60க்கும் மேற்பட்ட இடங்களில் வாகன பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

சென்னை தென் மேற்கு மாவட்ட கழகம் சார்பில் மெட்ராஸ் என்பதை சென்னை என மாற்றிய கலைஞர் என்ற தலைப்பில், சென்னையின் வளர்ச்சியில் கலைஞர் அவர்களின் பங்களிப்பை விலக்கும் வகையில் பிரச்சார வாகனம் வடிவமைக்கபட்டது. அந்த வாகனத்தில் கலைஞர் அவர்கள் சென்னைக்கு கொண்டு வந்த பல்வேறு மாற்றங்கள், திட்டங்கள் பற்றி புகைப்படங்கள், வரை கலை, காட்சி பொருட்கள் வைக்கப்பட்டு பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் காட்சிப் படுத்தபட்டது. மேலும் ஓரணியில் தமிழ்நாடு மற்றும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள், அந்த பகுதியில் தி.மு.க. அரசாங்கம் கொண்டு வந்த திட்டங்கள், வளர்ச்சி பணிகள் பற்றி மக்கள் கூடும் ஒவ்வொரு இடத்திலும் வாகனத்தின் உள்ள ஒலிபெருக்கி மூலமும், பல இடங்களில் வட்ட கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்யப்பட்டது.

இந்த பிரச்சாரத்தில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் விஜய் வெங்கடேசன், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் என்.எஸ்.பாலசுப்ரமணியம், மயிலை மேற்கு பகுதி அவை தலைவர் ஜி,ராஜேந்திரன், மயிலை மேற்கு பகுதி இலக்கிய அணி தலைவர் பி.எஸ்.ஆறுமுகம் கலந்து கொண்டு ஒவ்வொரு இடத்திலும் ஓரணியில் தமிழ் நாடு என்ற முதல்வர் அவர்களின் முன்னெடுப்பை பற்றியும், கலைஞர் சென்னைக்கு கொண்டுவந்த திட்டங்கள் பற்றியும், திராவிட மாடல் அரசின் திட்டங்கள் பற்றியும் சிறப்பாக விளக்கி பேசினார்கள்.

இந்த பிரச்சார பயணம் சிறப்பாக அமைய காரணமாக இருந்த மேற்கண்ட பேச்சாளர்களுக்கு பாராட்டுக்கள் மேலும் இந்த வாகன பிரச்சார வெற்றி பெற காரணமாக இருந்த தி.நகர் கிழக்கு பகுதி செயலாளர் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, அனைத்து வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், பாக உறுப்பினர்கள் நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றிகளை வாழ்த்துக்களையும் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு தெரிவித்தார்.

தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

தருமபுரி கிழக்கு மாவட்ட துணைத் தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம்!

சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி துணைத் தலைவர் எம்.நாகராஜன் மறைவெய்திய காரணத்தால் **முனைவர் வி.மலையமான், பி.எச்டி.,** (4/18, மாரியம்மன் கோவில் தெரு, சத்திரம் மேல வீதி, தருமபுரி - 636 701.) அவர்கள் மாவட்ட துணைத் தலைவராகவும் -, மாவட்ட துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட கே.தீர்த்தராமன், ஜி.முருகன், சேட்டு (எ) பிரபாகரன் ஆகியோரை அவர்கள் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவர்களுக்குப் பதிலாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் **தருமபுரி கிழக்கு மாவட்ட துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.**

துணை அமைப்பாளர்கள் - ஆர்எம். வெற்றிவேல், 1/154, ராஜாகொல்லஅள்ளி, பி.அக்ரஹாரம் வழி, தருமபுரி - 636 813. எஸ்.பாரதிதாசன், 1, ஜடையன் வீதி, 7வது வார்டு, குப்பா தெரு, தருமபுரி - 636 701. எஸ். கார்த்திக் 5/144, நல்லாகவுண்டனஅள்ளி, சோகத்தூர் அஞ்சல், தருமபுரி வட்டம் - மாவட்டம்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
நாள் : 16-07-2025.
சென்னை - 18.

கார்த்திகேய சிவசேனாபதி,
செயலாளர்,
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு 99வது வார்டு வட்ட கழக செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் ஆலோசனைப்படி, 99வது வாடுக்கு உட்பட்ட பாகம் எண் : 11, 12க்கு உட்பட்ட பெருமாள் முதல் தெரு, முத்தையா நாயக்கன் தெருவில் வீடு வீடுகளாய் சென்று ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை மற்றும் பரப்புரை படிவத்தை தி.மு.க அயலக அணி மாநில துணைச் செயலாளர் 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி பாகத்தில் உள்ள வீடுகள் தோறும் சென்று, 23 குடும்பங்கள் 101 உறுப்பினர்களை புதிதாக இணைத்து படிவத்தில் கையொப்பம் பெற்று திராவிட மாடல் அரசின் சிறந்த திட்டத்தை விளக்கிப் பேசினார். உடன் பாக நிலை முகவர் BLA2 டி.செந்தில் குமார், எஸ். தணிகாசலம், விஜயகுமார், ஹரி கிருஷ்ணன், உடன் இருந்தனர்.